අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/05/84/10/09-2019
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:
දිනය / திகதி / Date: 2019.04. 25

பாராளுமன்ற பொதுச் செயலாளர்,
அரச கணக்கு தொடர்பான செயற்குழு,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை.

**பாராளுமன்றத்தின் அரச கணக்கு தொடர்பான செயற்குழு சபையினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் தங்களது மேற்பார்வை மற்றும் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் தங்களினால் எனக்கு அனுப்பப்பட்டுள்ள 2019.02.22 ஆம் திகதிய கடிதம் தொடர்பாக,

02. இதற்கமைய 2019.02.21 ஆம் திகதிய பாராளுமன்ற சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அரச கணக்குத் தொடர்பான செயற்குழுவின் பாராளுமன்ற வெளிப்பாட்டுத் தொடர் இலக்கம் 57 கொண்ட அறிக்கையின் கல்வி அமைச்சிற்குரிய விடயங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் எனது மேற்பார்வையினை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

**அகில விராஜ் காரியவசம்**
கல்வி அமைச்சர்
கல்வி அமைச்சு

**Akila Viraj Kariyawasam (M.P.)**
**Minister of Education**
**Ministry of Education**
**"Isurupaya"**
**Battaramulla**

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister: +94112784832, +94112784825, minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary: +94112784811, +94112785162, secretary.education@moe.gov.lk

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்:- 57

நிறுவனத்தின் பெயர் : கல்வி அமைச்சு

<table>
<tr><th></th><th>அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழு சபையினால் இணங்காணப்பட்ட குறைபாடுகள் /செயற்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள்.</th><th>நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்/கட்டளைகளை அமுல்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்/தற்போதைய நிலைமைகள்</th></tr>
<tr><td colspan="3">கல்வி அமைச்சு<br>2017 நவம்பர் 17</td></tr>
<tr><td>1</td><td>தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் தற்போதைய முன்னேற்றம்<br><br>மாகாண சபைகளில் இக்கொள்கை அமுலாக்கப் படுவதுடன், 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் பணியாற்றும் ஆசிரியர்களில் உயர்தர ஆசிரியர் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சாதாரண தர மற்றும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் இடமாற்றத்தை 2018 ஜனவரி மாதமளவில் பாடசாலை கட்டமைப்பிற்கும் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கும் பாதகம் ஏற்படாமல் மேற்கொள்ளுமாறு பி.க.அ. கூறினார். வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் முறையாக மேற்கொள்ளப்படுவதாக பி.க.அ மேலும் கூறினார்.</td><td>2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்குரியதாக தேசிய பாடசாலைகளினால் கிடைக்கப் பெற்றுள்ள வருடாந்த விண்ணபப்பபடிவங்கள். மற்றும் 10 ஆண்டுகளை விட மேற்பட்ட ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப்படிவம், ஆசிரியர் இடமாற்ற சபையினால் பரிசீலனை செய்து பாடங்களுக்கமைய மற்றும் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய ஒப்பீடுகளை மேற்கொண்டு இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>
<table>
<tr><th></th><th colspan="3">2018</th><th colspan="3">2019</th></tr>
<tr><td></td><td>ஆண்டு</td><td>10 ஆண்டுகள்</td><td>மொத்தம்</td><td>ஆண்டு</td><td>10 ஆண்டுகள்</td><td>மொத்தம்</td></tr>
<tr><td>மொத்த விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கை</td><td>2902</td><td>10589</td><td>13491</td><td>4826</td><td>2400</td><td>7226</td></tr>
<tr><td>இடமாற்றம் மேற்கொள்ளப் பட்ட எண்ணிக்கை</td><td>1165</td><td>7199</td><td>8364</td><td>1440</td><td>1210</td><td>2650</td></tr>
<tr><td>இடமாற்றம் மேற்கொள்ளப் பட்ட விகிதாசாரம்</td><td>40%</td><td>60%</td><td>62%</td><td>30%</td><td>51%</td><td>37%</td></tr>
</table>
<br>இதற்கமைய ஒரு தேசிய பாடசாலையில் 10 ஆண்டுகளை விட சேவைக்காலம் காணப்பட்ட போதிலும் ஆசிரியர்களின் பாடத்திற்குரியதான பதிலீட்டாளர்களை ஒப்பீடு செய்வதன் சிரமம், பிரதேச ரீதியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்காக பதிலீட்டாளரை ஒப்பீடு செய்ய முடியாமைக்கமைய மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட வயதெல்லையை தாண்டுவதற்கு இணங்க இடமாற்றம் மேற்கொள்ள முடியாதிருந்த ஆசிரியர்களின் அளவு வருடாந்தம் பாடசாலைகளில் எஞ்சுவதுடன் பாடத்திற்குரியதாக பதிலீட்டாளர்களை ஒப்பீடு செய்வதன் மூலம் இவ் ஆசிரியர்களும் எதிர்காலத்தில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.</td></tr>
<tr><td>2</td><td>2008 தொடக்கம் 2017 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையிலான காலத்தில் பாடசாலை கட்டமைப்பில் இடம்பெற்ற மோசடி மற்றும் ஒழுங்கீனச் செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகள்<br><br>இது பற்றி முறையான ஒழுக்காற்று விசாரனை ஒன்று மேற்கொள்வதற்கு விசாரனை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவுவதாக பி.க.அ கூறினார். இது பற்றி முதலில் உள்ளக விசாரனையொன்றை மேற்கொள்ளுமாறும் 2008 தொடக்கம் நிலவும் பிரச்சினைகளை</td><td>❖ கல்வி அமைச்சின் கீழ் நாடு பூராகவும் விரிவடைந்த காணப்படும் தேசிய பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி மற்றும் அமைச்சில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளை போன்று உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு பரிசோதனைகள் தொடர்பிலான விசாரனை செயற்பாடுகளுக்கு உரியதாக தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் வாசகத்திற்கமைய அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் குற்றப் பத்திரங்களைத் தயாரிக்கும் செயற்பாடுகள் விசாரனை உத்தியோகத்தருக்குரிய பணியாகும். இதற்காக கல்வி அமைச்சிற்குரிய விசாரனை உத்தியோகத்தர் குழாம் மிகச் சிறியளவில் இருப்பதனால் விசாரனை உத்தியோகத்தர் பதவியின் அளவினை அதிகரிப்பதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | தீர்க்கப்பட்ட / தீர்க்கப்படாதது என வகைப்படுத்தி திகதி சகிதம் சுருக்கமான அறிக்கையொன்றை டிசெம்பர் 15 க்கு முன்னர் பெற்றுக் கொடுக்குமாறு குழு கட்டளையிட்டது. | ❖ விசாரனை உத்தியோகத்தர் நியமனக் கடிதத்தின் விசாரனைகளை பூர்த்தி செய்து அறிக்கை வழங்க வேண்டிய காலம் உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அக்காலம் தாண்டிச் செல்வதாக மேற்பார்வை செய்யும் சேவையில் தொலைபேசி ஊடாக அல்லது நினைவுகூறல்களை அனுப்புவதன் மூலம் அல்லது விசாரனை செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் விசாரனைகள் தாமதமடைவதாயின் இடைக்கால அறிக்கையை வழங்குமாறு விசாரனை உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.<br><br>❖ விசாரனை மூலம் தெரிய வந்த விடயங்கள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் III பகுதியின் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய முதலாவது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக மற்றும் இரண்டாவது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக குற்றப்பத்திரங்களை வெளியிட்டு முறையான ஒழுக்காற்று விசாரனைகளை மேற்கொள்ளல்.<br><br>❖ விசாரனை பரிந்துரைகளுக்கமைய குற்றப்பத்திரம் வெளியிடப்படாத சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று செயற்பாட்டின் கீழ் எச்சரிக்கை விடுத்தல், இடமாற்றத்தை மேற்கொண்டு ஒழுக்காற்று செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்.<br><br>❖ அடிப்படை விசாரனைகள் மேற்கொள்ளப்படாத அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் அது தொடர்பில் அதிபர் / மாகாண கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிக்கைகளை பெற்று அம்முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.<br><br>❖ இது எவ்வாறாக இருப்பினும் விசாரனை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டதன் பின்னர் முறையான ஒழுக்காற்று விசாரனை அறிக்கையினை வழங்குவது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு நினைவுகூறல்களை அனுப்பி ஒழுக்காற்றுச் செயற்பாடுகளை துரிதகதியில் பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>❖ தற்போது இறுதி அறிக்கையினை வழங்காதுள்ள வழக்குகள் தொடர்பான தகவல்கள் அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக உரிய நீதிமன்றங்களின் பதிவாளர்களை அறிவுறுத்தியதை தொடர்ந்து இறுதி வழங்கு அறிக்கையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.<br><br>❖ அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்குக் கோவை, பெறுகை வழிகாட்டல் ஆலோசனை, பொது நிருவாக சுற்றறிக்கை, நிதி அமைச்சின் சுற்றறிக்கை, கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்குரியதாக செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய முறைகள் குறித்து அதிபர்களை அறிவுறுத்தல்.<br><br>❖ ஒழுக்காற்று செயற்பாடுகள் தொடர்பாக அதிபர்களை அறிவுறுத்தல்<br><br>❖ பாடசாலை முறைமையில் நிருவாகப் பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக பயிற்சி வேலைத்திட்டங்களை வகுத்தல்.<br><br>2019.02.28 ஆம் திகதி ஒழுக்காற்றுக் கோவைகளின் தற்போதைய நிலைமைகள் இணைப்பு 01 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 03 | **ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்றவர்க ளுக்கு கணணி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் ஊடாக மாணவர்களுக்கு உதவுதலை துரிதப்படுத்துவது பற்றிய தற்போதைய நிலை.** | 05 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தகைமை பெறும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் இடையில் தடைப்படுவதை தடுக்கும் வகையில் 6 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரை 500.00 ரூபா மாதாந்தக் கொடுப்பனவாக அரசாங்கத்தினால் ஆண்டு ஒன்றுக்கு ரூபா 5000.00 புலமைப்பரிசில் நிதி வழங்கப்படுகின்றது. |

இது பற்றி ஒரு மாதத்திற்குள் அறிக்கை ஒன்றை பெற்றுக் கொடுக்குமாறு பி.க.அ இற்கும் மேற்படி மாணவர்களுக்கான உதவிகள் மீதமாவது பற்றி ஆய்வொன்றை நடாத்தி அறிக்கையொன்றை பெற்றுக் கொடுக்குமாறும் கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக் களத்திற்கும் குழு கட்டளையிட்டு ள்ளது.

இச் செயற்பாடுகள் இதுவரையில் அதிபர்களினால் சமர்ப்பிக்கப்படும் வவுச்சர்களுக்காக வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக உரிய மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு நிதி வைப்பிலிடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இருப்பினும் இம்முறையில் மாதாந்தம் மாணவர் ஒப்பத்தை கட்டாயப்படுத்துவதற்கமைய பாடசாலை மூலம் வவுச்சர்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க நீண்ட காலம் கடப்பதுடன் மாணவர் சமூகமளிப்பினை உறுதிப்படுத்தும் போது உருவாகக்கூடிய பிரச்சினைகள் காரணமாக புலமைப்பரிசில் பயனாளிகளுக்கு கிடைக்க வேண்டிய உதவி நிதியினை உரியவாறு வினைத்திறனுடன் செலுத்தும் பிரச்சினையினை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது.

எனவே கடந்த ஒரு சில ஆண்டுகள் பூராகவும் புலமைப்பரிசில் உதவிக்காக ஒதுக்கப்பட்ட நிதி உரியவாறு பயன்படுத்தப் படாமையினால் கல்வி அமைச்சு பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது.

இதற்கமைய அரச கணக்கு செயற்குழுவின் பரிந்துரையுடன் 5 ஆம் தர புலமைப்பரிசில் கொடுப்பனவு ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் (Online Programme) கொடுப்பனவிற்காக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டதுடன் இதற்காக பாடசாலை செயற்பாட்டுக் கிளையினால் இனங்காணப்பட்ட வளவாளரினால் இலவசமாக மேற்கொள்வதற்கு இணக்கத்தை தெரிவித்து பொருத்தமான மென்பொருள் தயாரிக்கப்பட்டது.

இது எவ்வாறாக இருப்பினும் இப்பணிகளுக்காக வளவாளரின் பங்களிப்புடன் வகுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள், பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் சேவைக்கு பின்னரான பணிகள் தொடர்பில் திருப்தியடைய முடியாது என மேற்பார்வை செய்யப்பட்டதாக தகவல் தொழில்நுட்பக் கிளை மூலம் பரிந்துரை செய்யப்பட்டது.

இதற்கமைய பொருத்தமான மென்பொருளை உருவாக்குவ தற்கும் தகவல் தொழில்நுட்பக் கிளைக்குப் பொறுப்பளிக்கப் பட்டது. தகவல் தொழில்நுட்பக் கிளையினால் Sky Management Systems என்ற நிறுவனம் இலவசமாக ஒன்லைன் வேலைத்திட்டத்தை வகுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கமைய இந்நிறுவனத்தினால் Online வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இதற்கமைய இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் | கால எல்லை |
|---|---|---|
| 01 | ஹோமாகம மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர வலயங்களின் மேற்பார்வை வேலைத்திட்டங் களை அமுல்படுத்தல். இதன் போது புலமைப்பரிசில் உதவி ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் கொடுப்பனவு களை மேற்கொள்ளல். | செப்ரெம்பர் 2018 தொடக்கம் இன்று வரை |
| 02 | இவ் வேலைத்திட்டங்களை நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்வதற்காக வலயக் கல்வி அலுவலகங்களின் பாடஇணை உத்தியோகத்தர்கள் மற்றும் விடய எழுது வினைஞர்களை இவ் வேலைத் திட்டத்திற்காக பயிற்றுவித்தல் | 2018 செப்ரெம்பர் - 2018 நவம்பர் |
| 03 | இவ் வளவாளர்களினால் தேசிய பாடசாலைகளில் விடயத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர்கள் மற்றும் விடய எழுது வினைஞர்களை இவ் | ஜனவரி 2019 2019 பெப்ரவரி |

| | | |
|---|---|---|
| | வேலைத்திட்டத்திற்காக பயிற்றுவித்தல். | |
| 04 | 5 ஆம் தரப் புலமைப்பரிசில் தேசிய பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய சுற்றறிக்கையினை வெளியிடல். | 2019 பெப்ரவரி |
| 05 | 5 ஆம் தர புலமைப்பரிசில் உரித்தாகும் சகல மாணவர்களினதும் தகவல்களை தேசிய பாடசாலைகளில் உள்ளடக்குதல். | 2019 பெப்ரவரி - ஏப்ரல் |
| 06 | தரம் 05 புலமைப்பரிசில் ஒன்லைன் வேலைத்திட்டத்தில் புள்ளிவிபரங்களை உள்ளடக்குவது தொடர்பில் முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்ளல். | 2019 மார்ச் - ஏப்ரல் |

| **திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால வேலைத்திட்டங்கள்** | | |
|---|---|---|
| | **திட்டமிடப்பட்டுள்ள பணிகள்** | **கால எல்லை** |
| | இவ் ஒன்லைன் வேலைத்திட்டத்தை உத்தியோகபூர்வமாக அமுல்படுத்தல் | |
| 07 | 5 ஆம் தர புலமைப்பரிசில் ஒன்லைன் வேலைத்திட்டத்தின் கொடுப்பனவுகளை வலய மட்டத்தில் மேற்கொள்ளல். இதன் போது கல்வி அமைச்சினால் விடுவிக்கப் பட்ட ஒதுக்கீடுகள் மாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு வழங்கப்படுகின்றது. மாணவர் கணக்குகளுக்கு நிதி வைப்பிலிடுவதற்காக இவ் ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் மாதாந்தம் தன்னியக்கமாக தயாரிக்கப்படும் Slip File இனை Download செய்து வலயக் கல்வி அலுவலகத்தினால் காசோலையுடன் உரிய வங்கிக்கு அனுப்பப்படுகின்றது | 2019 ஏப்ரல் தொடக்கம் |
| 08 | முன்னேற்ற மீளாய்வு | 2019 மே தொடக்கம் |
| 09 | பிரிவெனா மற்றும் தனியார் பாடசாலை களின் ஒன்லைன் வேலைத்திட்டங்களுக் காக இணைத்தல் | 2019 ஜுன் தொடக்கம் |
| 10 | ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் சகல தேசிய பாடசாலைகளுக்காகவும் கொடுப்பனவு மேற்கொண்டு முன்னேற்ற மீளாய்வு மூலம் மேற்பார்வை உட்பட பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குதல். | 2019 ஜனவரி தொடக்கம் |
| 11 | மாகாணப் பாடசாலைகளுக்காக புலமைப் பரிசில் கொடுப்பனவுகள், ஒன்லைன் வேலைத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சுற்றறிக்கையினை வெளியிடல் | 2020 ஜனவரி தொடக்கம் |

| | | |
|---|---|---|
| 4 | **அதிபர்களை ஆட்சேர்ப்பது பற்றிய தற்போதைய நிலை**<br><br>248 தேசிய பாடசாலைகளில் சட்டரீதியான அதிபர்கள் | ▪ நாட்டின் 302 தேசிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சை 2018 பெப்ரவரி மாதம் 16, 18, 19, 20, 22, 23, 25, 26, 27 ஆம் |

| | | |
|---|---|---|
| | நியமிக்கப்பட்டவில்லை என்பதுடன், இப் பாடசாலைகளுக்கு அதிபர்களை ஆட்சேர்க்கும் அறிவித்தல் கல்வி சேவைகள் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளதா கவும் பி.க.அ கூறினார். இவ் அறிவித்தல் இம்மாத இறுதியில் அல்லது டிசெம்பர் மாதத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட இருப்பதாகவும் இவர் தெரிவித்தார். | திகதியன்றும் நவம்பர் மாதம் 26, 27, 29 ஆகிய திகதிகளிலும் டிசம்பர் மாதம் 01, 02, 03, 04, 06, 07, 14, 17 ஆகிய திகதிகளிலும் நடாத்தப்பட்டதுடன், வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கமைய உத்தேச உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் நேர்முகப் பரிட்சைக்குரிய ஏனைய சகல ஆவணங்களும் எனது இலக்கம் ED/4/58/20/ESC(ii) மற்றும் 2019.02.13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.<br>▪ அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவின் செயலாளரின் இலக்கம் ESC/APP/SLPS/04/59/2017 (VOL II) மற்றும் 2019.03.01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனேகமான பாடசாலைகளுக்காக உரிய சேவையில் / தரத்தின் உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்காமைக்கமைய இந்நேர்முகப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆவணங்களை இரத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>▪ இது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக்குழுவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 5 | **2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இணையான வகுப்புகளுக்கு வரையறையைத் தாண்டி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல்.**<br>1,5 மற்றும் 6 தரங்கள் தவிர இடைத் தரங்களுக்கு மாணவர்களை சேர்க்கும் போது 2008/37 சுற்றறிக்கைக்கு ஏற்ப செயற்படுவதாக கூறிய பி.க.அ விசேட சந்தர்ப்பங்களான நீதிச் சேவை உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள், திடீர் அனர்த்தங்களால் வதிவிட மாற்றங்களுக்கு உட்பட்டவர்கள், நெடுஞ்சாலையால் வீடுகளை இழந்தவர்கள் மற்றும் அரச ஊழியர்களின் இடமாற்றம் இடம்பெறும் போது இவ்வாறு மேலதிக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவதாக அவர் தெரிவித்தார். | தேசிய பாடசாலைகளில் இடைத் தரங்களுக்காக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சின் தேசிய பாடசாலை கிளைக்கு தபால் மூலமும் பொதுமக்கள் வருகை தந்து மேற்கொள்ளும் கோரிக்கையும் மக்கள் பிரதிநிதிகளினால் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையும் நாளாந்தம் கணிசமான அளவு கிடைக்கின்றன. இதன்போது கோரிக்கைகள் தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி 2008/37 சுற்றறிக்கமைய அதிபர்களினால் பரிந்துரை வழங்குமாறு அறிவிப்பது பொதுவான முறையாகும். இதற்கமைய பாடசாலைகளில் 1,5,6 தவிர இடைநிலைத் தரங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய 2008/37 சுற்றறிக்கைக்கமைய தயாரிக்கப்பட்ட அதிபர் பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப் பட்டியலுக்காக கல்விச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்று அவ் அங்கீகார ஆவணம் மீள அதிபர்களுக்கு அனுப்பப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து ஆட்சேர்ப்புச் செயற்பாடுகள் பொதுவான முறையில் இடம்பெறுகின்றன.<br>இருப்பினும் வருடாந்தம் இடமாற்றப்படும் நீதிபதிகளின் பிள்ளைகள், வைத்தியர்களின் பிள்ளைகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகள் ஒரே பாடசாலையில் சேவைக்காலம் 03 ஆண்டுகள் பூர்த்தியடைந்த கல்விப் பணியாளர் சபை உத்தியோகத்தர்களின் பிள்ளைகள், கல்விசாரா பணியாளர் சபையின் உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் சேவையின் தேவைக்கமைய கருத்திற் கொண்டு சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| 6 | **சர்வதேச பாடசாலைகள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் சர்வதேச பாடசாலை களிலிருந்து வருட நடுவில் அரசாங்க பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் முறையில் மற்றும் நிலவும் சட்ட வரையறைக்குள் அதாவது 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவிப் பாடசாலை பயிற்சிக் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 வது பிரிவின் கீழ் இப்பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத போதிலும் நாடு முழுவதும் இப்பாடசாலை துரிதமாக பரவுதல் பற்றியும் சர்வதேச பாடசாலைகளிலிருந்து அரசாங்க பாடசாலைகளுக்கு இடம்மாறும்** | தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்வது கல்வி அமைச்சின் நோக்கமாகும். இருப்பினும் சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வைக்குட்படுத்தக்கூடிய வகையில் சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது அத்தியாவசிய விடயமாகும். இதற்காக 1961 இலக்கம் 08 கொண்ட உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் பயிலுனர் கல்லூரி (மேலதிக ஒதுக்கீடு) சட்டத்தின் 25 வது வாசகத்தை மறுசீரமைத்தல் (தனியார் தரப்பினருக்கும்) பாடசாலையை ஆரம்பிக்கக்கூடிய வகையில் மேற்கொள்ள வேண்டியதுடன் இது சமூக மற்றும் அரசியல் ரீதியில் உணர்வு பூர்வமான விடயமாக அமைவதினால் இதுவரையில் இவ்வாசகம் மறுசீரமைக்கப்படவில்லை.<br>தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனம் (இலக்கம் MNPEA/2018/064 மற்றும் 2018.04.09 திகதிய) சமர்ப்பிக்கப்பட்ட அதற்குரியதாக 2019.01.22 திகதி வழங்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தின் (இலக்கம் |

| | | |
|---|---|---|
| | **போது மேற்படி பாடசாலைகளில் வருடாந்த கற்றல் கால வரையறையில் மாற்றங்கள் காரணமாக உரிய வயதை பூர்த்தி செய்யாத மாணவர்கள் சாதாரண தரம் மற்றும் உயர் தரங்களுக்கு தோற்றுதல்.**<br><br>இதற்காக 2008/37 சுற்றறிக்கையை பயன் படுத்திக்கொள்வதாகவும் இந்நிலைமையை தடுப்பதற்கு அரசாங்கப் பாடசாலைகளுக்கு புதிய சுற்றறிக்கையொன்றை வெளியிடப் போவதாகவும் பி.க.அ. கூறினார். | 19/0132/105/003 மற்றும் 2019.01.30 ஆம் திகதி) குறிப்பிடப் பட்டிருப்பது தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் இணைந்து சர்வதேச பாடசாலைகளின் தரச் சான்றிதழ் மற்றும் மேற்பார்வை தொடர்பான கொள்கை தேசிய கல்வி ஆணைக்குழு சபையின் ஊடாக துரிதகதியில் தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இவ் வரைவு கொள்கையினை கருத்திற் கொள்ளும் வகையில் தேசிய கொள்கை, பொருளாதார விவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறும் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் சர்வதேச பாடசாலைகளுடன் தொடர்புபட்ட மேற்கூறப்பட்ட கொள்கையினை தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் கல்வி அமைச்சிற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய இயலுமை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>அத்துடன் சர்வதேச பாடசாலைகளின் மாணவர்களை இடைநிலை வகுப்புகளுக்காக அரச பாடசாலைகளுக்கும் சேர்த்துக் கொள்ளும் போது வயது மட்டம் மற்றும் அடைவு மட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சைகளுக்காக பாடசாலை விண்ணப்பதாரர்களாக தோற்றும் போது வயது எல்லையில் விசேட வரப்பிரசாதங்கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் அரச பாடசாலைகளில் இவ் வயது எல்லையில் உள்ள மாணவர்களுக்கு சர்வதேச பாடசாலைகளிலிருந்து வருகைதரும் மாணவர்கள் காரணமாக வயதெல்லையை அடிப்படையாகக் கொண்டு அநீதி ஏற்படுவதில்லை. |
| 7 | **யுனெஸ்கோ தலைமையகத்தினால் 2014-2015 காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் அதிபர் பதவி பற்றி கற்கை ஆய்வினை மேற்கொண்டு கைநூலொன்றை தயாரித்து 2016 யூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் கையளிப்பதற்கான கருத்திட்டம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நடைமுறைப் படுத்தவிருந்த காபன் கழிவை சூழலுக்கு அகற்றுவதை குறைப்பதற்கான கருத் திட்டத்திற்கு 2015/07/20 ஆம் திகதி வழங்கப்பட்ட ரூபா. 8,269,557 இல் (ஐ.அ.டொலர் 61,945) 87.45% எதிர்பார்க்கப் பட்டவாறு கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படாமையினால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை.**<br><br>குறித்த கருத்திட்டத்திற்கு கிடைக்க வேண்டிய நிதி தாமதிக்கப்பட்டமையால் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதாக பி.க.அ/ க.அ. கூறினார் | யுனெஸ்கோ ஈராண்டு பங்கேற்பு வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையினால் செயற்திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட யோசனைகளை அமுல்படுத்துவதற்காக யுனெஸ்கோ தலைமையத்தினால் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதுடன் உரிய காலத்திற்குள் செயற்திட்டங்களை பூர்த்தி செய்து உரிய தினத்திற்கு நிதி தீர்க்கப்பட வேண்டும்.<br><br>இதன்போது எமது தேசத்தினால் சமர்ப்பிக்கப்படும் செயற்திட்ட யோசனையை யுனெஸ்கோ தலைமையில் சமர்ப்பித்தல் செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அச் செயற்திட்டம் அமுல்படுத்தப்படும் நிறுவனம் மற்றும் யுனெஸ்கோ தலைமையகத்தைத் தெளிவுபடுத்தல் மற்றும் செயற்திட்டங்களின் நிதி / பௌதீக முன்னேற்றங்கள் பின்னூட்டல் மேற்கொள்ளல் இவ் ஆணைக்குழுவின் பணியாகும்.<br><br>இதற்கமைய 2014-2015 ஈராண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக எமக்குக் கிடைக்கப் பெற்ற நிதி ஒதுக்கீடுகள் உரிய செயற்திட்டம் சமர்ப்பிக்கப்படும் நிறுவகத்திற்கு விடுவிப்பதுடன், உரிய இணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.<br><br>இதன்போது யுனெஸ்கோ தலைமையத்திற்கு செயற்திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் போதியளவு காலம் இதற்காக ஒதுக்கி பொருத்தமான செயற்திட்டத்தை மாத்திரம் அங்கீகரித்ததன் பின்னர் உரிய நிதி ஒதுக்கீடுகள் எமக்கு வழங்க குறிப்பிட்ட காலம் கடக்கும் அவ்வாறு தாமதமடைந்து கிடைத்த நிதி ஒதுக்கீடு 2014-2015 ஈராண்டு வருடாந்த செயற்திட்ட யோசனையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு செயற்திட்டங்கள் அச் செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனத்தினால் அமுல்படுத்துவதற்காக முயற்சித்து போதிலும் உரிய நிதியாண்டில் அதனை முழுமையாக பூர்த்தி செய்யத் தவறியுள்ளது.<br><br>இச் சம்பவத்தைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் அங்கீகரிக்கப்படும் செயற்திட்டங்களது உரிய நிதியாண்டில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பின்னூட்டல்களை மேற்கொள்வது மற்றும் சமகால அறிக்கைகளை பெற்றுக் கொள்ள எமது நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 8 | **2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சிசுஅருண கல்வி (விசேட புலமைப் பரிசில்) நிதியத்தின் நிலையான வைப்புக் கணக்கில் ரூபா 3,584,879 மீதியும் நடைமுறைக் கணக்கில் ரூபா. 159,530 மீதியும் காணப்பட்ட போதிலும் 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இலக்கிட பட்ட வகையில் புலமைப்பரிசில்களை பெற்றுக் கொடுப்பதற்கு 2017/10/30 ஆம் திகதி வரையில் முடியாமல் போயுள்ளது.**<br><br>இந்நிதியத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு 2 மாதங்களுக்குள் செயற்படப் போவதாக இங்கு பி.க.அ உறுதியளித்தார். | சிசு அருண கரன் லிமிட்டட் என்ற கம்பனியின் நாமத்தின் கீழ் அவ் நிதியம் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இக்கம்பனியின் பெயர் நீக்கப்பட்டுள்ளமையினால் அதற்குரியதான சொத்துக்கள் மற்றும் உரிமைகள் பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் வினவும் வேளையில் உரிய பொறுப்பாளர்களுடன் செயற்பட்டு மேற்கூறப்பட்ட கம்பனியை மீளத் தாபிக்க அல்லது உரிய விடயப் பரப்பிற்கு நிதி விடுவிப்பது தொடர்பில் திறைசேரிச் செயலாளரிடம் வினவுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய அரச நிதித் திணைக்களத்தினால் உரிய பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் தேவைக்கமைய இப்பணிகளுக்காக தனியான வரவு செலவு ஒதுக்கீட்டினை மேற்கொண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தினை தொடர்ந்தும் முன் கொண்டு செல்வது பொருத்தமான என மேற்பார்வை வழங்கப்பட்டுள்ளது.<br><br>இதற்கமைய உரிய நிதியத்தின் தொடர்ச்சியான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக போதியளவு நிதி இன்றி இருப்பதனால் திறைசேரி செயலாளருக்கு இந்நிதி பொதுத்திறைசேரி மூலம் திரண்ட நிதியத்திற்கு வைப்பிலிட்டு இவ் அமைச்சினால் அமுல்படுத்தப்படும் ஏனைய புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்காக நிதி விடுவிக்குமாறு ED/01/12/14/05/01 மற்றும் 2019.03.13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திறைசேரியிலிருந்து கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 9 | **2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட மாதிரி ஒன்றின் ஊடாக இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறச் செய்தல் பற்றிய கடிதக் கோப்புக்கள் தாமதமாக அனுப்பப்பட்டமையினால் ஓய்வு பெறச் செய்தல் உரிய திகதியில் இடம்பெறாமை மற்றும் ஓய்வில் செல்லும் ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் சம்பள திருத்தத்தை மேற்கொள்வதற்கு நீண்டகாலம் கடந்துள்ளமை.**<br><br>இது பற்றி விசேட வேலைத்திட்டமொன்றை வகுத்து வருவதாக கூறிய பி.க.அ இது பற்றி குழுவிற்கு இயன்றளவில் விரைவாக அறிக்கை இடுவதாக குறிப்பிட்டார். ஓய்வு பெறுவதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பதாகவேனும் கோப்புகளை இற்றைப்படுத்த வேண்டுமென குழு வலியுறுத்தியது. | • இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் செயற்பாடுகளை உரிய தினத்திற்கு மேற்கொள்ளும் நோக்குடன் உத்தியோகத்தர்களை கட்டாயமாக ஓய்வுறுத்தும் திகதி தொடக்கம் 06 மாதங்களுக்குள் ஓய்வுறுத்துவதற்குரியதான ஆவணங்களை முறையாக பெற்றுக் கொள்வதற்காக உரிய உத்தியோகத்தர் மற்றும் வலயத்தை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் அதிபர் கிளையினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>• இதற்கமைய இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர் களை ஓய்வுறுத்துவதற்குரியதாக கீழ்க் குறிப்பிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>2018 ஆம் ஆண்டுக்காக முன் அறிவித்தல் - 451<br><br>2019 ஆம் ஆண்டுக்காக முன் அறிவித்தல் - 325<br><br>(2019.03.27 ஆம் திகதியன்று)<br><br>• 2018 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற (2019 ஆம் ஆண்டில் முதல் ஒரு சில மாதங்களுக்குள் ஓய்வுபெறவுள்ள உத்தியோகத்தர் களுடன்) இலங்கை அதிபர் சேவையின் மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 550 ஆகும்.<br><br>• மேலும் கட்டாய ஓய்வுறுத்தல் தொடக்கம் 5 வருடங்களுக்கு முன்னர் உத்தியோகத்தர்களின் சுயவிபரக் கோவையையும் சமகாலப்படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தல் 2019.05.30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>• அத்துடன் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்ப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவையின் III வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய அதிபர்களின் சேவையினை நிரந்தரப்படுத்துவதற்கான பணிகள் ஏற்கனவே நிறைவேற்றப்படுவதுடன் எதிர்வரும் ஆண்டுக்குள் இப்பணிகளை பூர்த்தி செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 10 | **2016 ஆம் ஆண்டில் உறுதிச் சிட்டை முறைக்கு மாற்றப்பட்டு பாடசாலை சீருடை விநியோக செயன்முறை ஆரம்பமானதுடன்,** | அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானங்களுக்கமைய 2016 ஆம் ஆண்டில் சீருடை வவுச்சர்கள் வழங்கப்பட்டதுடன் காணப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களுக்கமைய பாதுகாப்பு இருப்பினை தேக்கி வைத்து களஞ்சியப்படுத்துவது கட்டாயமானதாகும். அவ்வாறு |

| | | |
|---|---|---|
| | **அச்சமயம் 31/12/2016 ஆம் திகதியில் ரூபா 675,296,036 பெறுமதியான பாடசாலை மற்றும் பிரிவெனா சீருடை மற்றும் காவியுடைப் பொதிகள் 2,683,716 எஞ்சியுள்ளமை**<br><br>மேற்படி கையிருப்பானது உயர்தரத்திலான பாதுகாப்பு கையிருப்பாகும். (Buffer Stock) என்பதுடன் தற்சமயம் இது வெள்ள நிதியுதவியாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக பி.க.அ. கூறினார். | கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு இருப்பு சீருடை களஞ்சியசாலையில் இருந்ததுடன் அவை திடீர் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக வழங்கி தற்போது சீருடைத் துணி இருப்பு விநியோகித்து முடிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 11 | **1980/10/01 ஆம் திகதிய இலக்கம் 108/6 கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையை மீறி கூடுதல் எண்ணிக்கையான பிரிவெனாக்கள் செயற்பட்டதுடன் வருடாந்தம் ரூபா 300 மில்லியன் அளவிலான நிதி ஒதுக்கப்படுவதோடு இப்பிரிவெனாக்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு போதுமான வேலைத்திட்டம் செயற்படுத்தப் படாமை**<br><br>2014/2015 ஆம் ஆண்டுகளில் பிரிவெனா பணிப்பாளர் ஒருவர் இல்லாமையால் இந் நிலைமை ஏற்பட்டதாகவும் 2016/2017 ஆம் ஆண்டுகளில் பிரிவெனா ஒழுங்குபடுத்தல் முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குழு முன்னிலையில் புலனாகியது. எனினும் பிரிவெனாக்களின் மாணவர் விகிதத்திற்கு ஏற்ப ஆசிரியர்களை இணைக்கும் அடிப்படை மாற்றப்பட வேண்டுமெனவும் விடயம்சார் அடிப்படையையும் இதற்கு உறுதுணையாக்கிக் கொள்ள வேண்டுமெனவும் ஆங்கிலம் மூலமான பிரிவெனாக்களின் பாடப் புத்தகங்கள் மற்றும் வினாப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் பிரச்சினையும் காணப்பட்டதாக தெரிய வந்துள்ளது. பிரிவெனா கல்வி சீர்குலைவதற்கு ஏதுவான விடயங்களை தணித்து இது பற்றிய அறிக்கையொன்றை பெற்றுக் கொடுக்குமாறு குழு கட்டளையிட்டுள்ளது. | பிரிவெனா மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனர். 18 உதவிக் கல்விப் பணிப்பாளர் தேரர்கள், 12 பாடப் பணிப்பாளர்கள், 30 பிரிவெனா இணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் 190 ஆசிரியர் ஆலோசகர்கள் ஏற்கனவே சேவையில் ஈடுபடுகின்றனர். அலுவலகச் செயற்பாடுகள் மற்றும் விடய மேற்பார்வைப் பணிகள் இடம் பெறுகின்றன. தற்போது பிரிவெனா மேற்பார்வைகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன.<br><br>தற்போது பிரிவெனா கிளையில் பணிப்பாளர் இருப்பதுடன், ஆசிரியர் மாணவர் சமநிலைப்படுத்தி பிரிவெனாக்களுக்குத் தேவையான அளவின் கீழ் ஆசிரியர்கள் வழங்கப்பட்டுள்ளனர். பாடஇணை ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருப்பது வெற்றிடப் பாடங்களுக்கு மாத்திரமாகும்.<br><br>ஆங்கில மொழிப் பிரிவெனாக்களுக்காக பாடவிதானங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழிப் பிரிவுடன் இணைந்து பிரிவெனா பாடநூல் ஆங்கில மொழிக்கு மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வினாப்பத்திரங்கள் பரீட்சை திணைக்களத்திலிருந்து ஆங்கில மொழி மூலப் பிரிவெனாக்களுக்காக மொழி பெயர்க்கப்படுகின்றது.<br><br>பிரிவெனாக்கள் சீர்குலைவு தொடர்பில் அவ்வவ் நிறுவனங்களின் பதிவாளர் தேரர்கள் மற்றும் பிரிவெனாக்களுக்குப் பொறுப்பான தேரர்கள் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூற வேண்டுமென தென்படுகின்றது. கல்வி அமைச்சு மற்றும் அதன் பிரிவெனாக் கல்விக் கிளையின் பணிகளாக அமைவது கல்விச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக உதவுவதாகும். அதற்குரிய சகல பணிகளும் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விக் கிளையினால் குறைவின்றி மேற்கொள்ளப்படுகின்றது. |
| 12 | **2016 பெப்ரவரி 12 ஆம் திகதி விடுக்கப்பட்ட கட்டளையின் படி பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தகவல்கள் அடங்கிய சகல தகவல்களும் உள்ளடக்கிய முறையான கணணி வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு விடுக்கப்பட்ட உத்தரவு இன்னும் நடைமுறைப்** | 1. பாடசாலைகளுக்காக இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக பாடசாலை வலையமைப்பு (Schoolnet) வேலைத்திட்டம் 2005.12.30 ஆம் திகதி தொடக்கம் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிக்கமைய அமுல்படுத்தப்பட்ட இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக இலங்கை டெலிகொம் மற்றும் டயலொக் கம்பனிக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம், தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் |

| | | |
|---|---|---|
| | **படுத்தப்படாமை.**<br><br>ஒப்பந்தத்தின் படி கணணி வலையமைப்பினை நிறுவுவதற்கு குறைந்தபட்சம் ரூபா. 37,090,000 2006 தொடக்கம் 2013 டிசெம்பர் 31 வரையில் பராமரிப்பிற்கென ரூபா. 579,140,248 உம் செலவிடப்பட்டுள்ளதுடன், ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்திற்கு இதற்கென ரூபா. 10.5 மில்லியன் செலவு ஏற்பட்டுள்ள போதிலும் செலவிற்கு ஏற்ற கொள்ளளவு மற்றும் வேகம் இன்மையால் 2017.02.28 ஆம் திகதி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்தள்ளது. அத்துடன் பாடசாலை கணணி வலையமைப்பு செயற்படாமையினால் 2013.12.31 ஆம் திகதியளவில் ரூபா. 16,122,312 செலவில் நிறுவகப்பட்டிருந்த கல்வி முகாமைத்துவத் தகவல் கட்டமைப்பு செயலிழந்துள்ளதாக புலனாகியுள்ளது. தற்சமயம் மீண்டும் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படும் கட்டத்தில் காணப்படுவதாகவும், குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் (வெளியாருக்கு வழங்குதல் (Outsource) ஊடாக நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக பி.க.அ கூறினார். இதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திய குழு இது செயற்படும் விதம் பற்றி கால வரையறை உள்ளிட்ட அறிக்கையொன்றை ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக் கொடுக்குமாறு கட்டளையிட்டது. அத்துடன் அமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவை வலுவுறச் செய்யுமாறு குழு கட்டளையிட்டது. | பாடசாலை உள்ளடங்கக்கூடிய வகையில் 1750 நிறுவனங்களுக்காக இணையத்தள வசதிகள் வழங்கப்படுகின்றன.<br><br>2. நிலுவைக் கட்டணத்திற்காக நிதி செலுத்தாமைக்கமைய 2016.02.17 ஆம் திகதி இலங்கை டெலிகொம் கம்பனியினால் அவர்களின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் செலுத்தவுள்ள நிலுவை நிதியில் 25% திற்கு ஏற்றவகையில் நிதி முற்பணமாக செலுத்தியதை தொடர்ந்து மீள் இணைப்புக்கள் தாபிக்கப்பட்டன. கட்டணப் பட்டியல்கள் செலுத்தாமைக்கான காரணமாக அமைந்தது டெலிகொம் நிறுவனத்தினால் இதுவரையில் வழங்கப்பட்டிருந்த செப்பு கம்பி (Copper Line) இணைப்புக்களுக்குப் பதிலாக பைவர் (Fiber optic line) இணைப்புக்களை தாபித்தமையினால் மாற்றமடைந்த IP முகவரியினை வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டது கட்டணப் பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது உரிய காலத்திற்குள் அவ் இணைப்புக்கள் அமுல்படுத்தும் நிலையில் காணப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் பரிந்துரை கல்வி அமைச்சினால் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட வலையமைப்பு செயற்பாட்டு அலகு (Network Operation Unit) பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அப்பரிந்துரையினை வழங்குவதற்காக IP முகவரி அவசியமாகும்.<br><br>3. இது எவ்வாறாக இருப்பினும் இணையத்தள வசதிகள் பயன்படுத்தப்படுபவர்களினால் இவ் இணைப்புக்களின் வேகம் மற்றும் கொள்ளளவு போதியளவு அமையவில்லை என அறிவித்தமைக்கமைய 2017.02.28 ஆம் திகதி பாடசாலை வலையமைப்பு (School net) முழுமையாக இடைநிறுத்தப்பட்டது.<br><br>4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிக்கமைய அமுல்படுத்தப் பட்ட இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்திட்டத்தின் 2017 பெப்ரவரி 27 ஆம் திகதி கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் ஆசிரியர்களின் மானிட வள முகாமைத்துவ ஒன்லைன் முறைமையினை உருவாக்குவதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. இம்முறைமை 2016 ஆம் ஆண்டின் இறுதி பகுதி வரை உத்தியோக பூர்வமாக பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்துவதற்கு கல்வி முறைமையில் காணப்பட்ட பல்வேறுபட்ட வசதிகளின் குறைபாடுகள் காரணமாக முடியவில்லை.<br><br>5. புள்ளிவிபரங்களின் உண்மைத் தன்மைக்காக ஆசிரியர்களின் சுய விபரக் கோவையினை அடிப்படையாகக் கொண்டு அவ்வவ் தனிப்பட்ட கோவைகளுக்கு பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்தர்களினால் புள்ளிவிபரங்களை உள்ளடக்கும் பணிகள் உட்படுத்தப்படுவதினால் அவர்களுக்கு வேறு முன்னணி பணிகள் அதாவது சம்பள மாற்றங்கள், வெளிநாட்டு விடுமுறையினை வகுத்தல் போன்ற பணிகளுக்காக பயன்படுத்துவதற்கமைய குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் ஏற்பட்டன.<br><br>6. ஆசிரியர்களின் மானிட வள முகாமைத்துவ ஒன்லைன் முறைமையினை அமுல்படுத்துவதற்காக இணையத்தள வசதிகளில் காணப்படும் தடைகள் கருத்திற் கொள்ள வேண்டிய தடைகளாக ஆரம்பித்தல் காணப்பட்ட போதிலும் அதற்குத் தீர்வாக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (Information and Communication Technology Agency - ICTA) இனால் அரச நிறுவனத்திற்காக தாபிக்கப்படும் இலங்கை அரச வலையமைப்பு (Lanka Government Network - LGN) இன் கீழ் அனைத்து வலயக் கல்வி அலுவலகங்களு க்காக இலவசமாக இவ் இணையத்தள வசதிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிரயோகக் காரணங்களுக்கமைய இச் சேவையினை பெற்றுக் கொள்ள முடியாதிருந்த மிகக் குறைந்த அளவினா் ஒரு சில வலயக் கல்வி அலுவகங்களுக்காக broad band இணைப்புக்களை பெற்றுக் |

| | | |
|---|---|---|
| | | கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.<br><br>7. இது எவ்வாறாக இருப்பினும் சகல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தற்போது ஆசிரியர்களின் மானிட வள முகாமைத்துவ ஒன்லைன் முறைமையில் சகல அரச பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களின் ஆசிரியர்களை உள்ளடக்குவது பூரணப்படுத்தப்படவில்லை.<br><br>8. ஏற்கனவே மாகாண மட்டத்தில் இறுதி புள்ளிவிபரங்களை தூய்மைப்படுத்தும் செயற்திட்டங்களுக்காக முகாமைத்துவக் கிளையினால் முன்னெடுக்கப்படும் இச் செயற்பாடுகளை தொடர்ந்து முறைமையை பயன்படுத்துவதற்காக பொருத்தமான நிலைமையினை அடைந்துள்ளது. ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அப்பணிகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>9. இவ் ஒன்லைன் முறைமையினை சமகாலப்படுத்துவதற்காக வலயக் கல்வி அலுவலகங்களின் நிறுவனங்களுக்கு கணணி மற்றும் உதிரிப்பாக வசதிகளை வழங்குவதற்கு தேவையான வசதிகள் கல்வி அமைச்சினால் ஏற்கனவே மேற்கொள்ளப் படுகின்றன.<br><br>10. இதற்கு மேலதிகமாக மாணவர் தகவல் முறைமை ஏற்கனவே உருவாக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதுடன் இத்தினங்களில் 2019 ஆம் ஆண்டுக்காக அரசாங்கப் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு வருகின்றது. சகல மாணவர்களினதும் (13 ஆண்டு வரை) தகவல்களை உள்ளடக்கி பூர்த்தி செய்ய இரண்டாவது பாடசாலை தவணை நிறைவடையும் வேளையில் மேற்பார்வை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 13 | **அரசாங்க பாடசாலைகளில் உயர்தர மாணவர்களின் வரவின் சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.**<br><br>இது பற்றி ஆய்வொன்றை மேற்கொண்டு இதற்கு தேவையான தீர்வுகளை தேட வேண்டுமென வலியுறுத்திய குழு இதற்காக முன்மொழிவுகள் அடங்கிய முழுமையான அறிக்கையை டிசெம்பர் 01 க்கு முன்னர் பெற்றுக் கொடுக்குமாறு கட்டளையிட்டது. | தேசிய கல்வி நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் இது தொடர்பில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஆராச்சியின் தீர்மானம், யோசனைகள் மற்றும் பரிந்துரைக்கமைய 2 சதவிகிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ் உரிய பரிந்துரையினை அமுல்படுத்துவதற்காகத் தேவையான அடிப்படைப் பணிகள் வகுக்கப்படுகின்றன. |
| 14 | **2017 வரவு செலவுத் திட்ட பிரேரணையொன்றின் படி உயர்தர ஆசிரியர்கள் மற்றும் மாணவர் களுக்காக டெப் கணணிகள் பெற்றுக் கொடுக்கும் கொள்வனவின் போது டெப் கணணிகளில் இருக்க வேண்டிய கொள்ளளவு மற்றும் அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றி இனம் காண்பதற்காக சாத்தியவள கற்கையாய்வொன்றை மேற்கொள்ளாமை மற்றும் கொள்வனவுக்குரிய கோப்புக்கள் மற்றும் தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் இதன் தற்போதைய நிலைமையை பரிசோதிக்க முடியாமை**<br><br>டெப் கணணிகளில் உள்ளடங்கும் விடயங்களை இனங்காண்பதற்கு சாத்தியவள கற்கை ஆய்வு மடிக்கணணி கொள்வனவின் பின்னர் | டெப் கணணிக்காக பெறுகைக் குழுவின் அங்கீகாரத்திற்கமைய விலைமனுதாரரை தேர்ந்தெடுத்து அவ் விலைமனுதாரருக்கு விலை மனுக்களை வழங்குவது தொடர்பாக எதிர்ப்புக்கள் இருப்பின் சமர்ப்பிக்குமாறு ஏனைய விலைமனுதாரருக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டினைக் கருத்திற் கொண்டு பெறுகை மேன்முறையீட்டு சபை, அமைச்சின் பெறுகைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட விலைமனுதாரர் நிராகரிக்கப் பட்டதுடன் ஏனைய விலைமனுதாரர்களின் விலைமனுப் பெறுமதிக்கு அமைய அணி திரட்டி பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>அதற்கமைய சிறுவர்களின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் நீடித்த நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அவ் விலைமனுக்கள் வழங்கப்பட வேண்டுமென உரிய விடயங்களை முன்வைத்து அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அது தொடர்பில் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கமைய மீள விலைமனு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு உட்படுத்தி விலைமனுதாரர்களை தேர்ந்தெடுத்து அமைச்சரவைக்கு விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அவ் அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக அதிமேன்மை தங்கிய ஜனாதிபதியினால் மேற்பார்வைகளை சமர்ப்பித்து முன்னோடி |

மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மற்றும் இந்த டெப் கணணிகளை 2018 மார்ச் மாதமளவில் பெற்றுக் கொடுக்க முடியுமென பி.க.அ கூறினார்.

செயற்திட்டமாக டெப் கணணி கொள்வனவு செய்யும் பணிகளை அமுல்படுத்துமாறு அறிவிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் அமைச்சரவை உப குழு மூலம் பரிந்துரைகளை பெற்று அதற்கமைய செயற்திட்டத்தை அமுல்படுத்துமாறு மேலும் அறிவிக்கப்பட்டது.

இதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவினால் தமது அறிக்கை 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்குரியதான அமைச்சரவை விஞ்ஞாபனமும் சமர்ப்பிக்கப்பட்டது அதன் தீர்மானத்திற்கமைய எதிர்காலச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

15

**ஏழாம் ஆண்டு புவியியல் பாடப் புத்தகத்தை சாதாரண கடதாசியில் அச்சிடும் போது ஏற்படும் செலவினை விட செயற்கை கடதாசியில் அச்சிடும் போது கூடுதலாக ஏற்பட்ட செலவு ரூபா. 128,939,700 ஆக இருத்தல்.**

இது மாதிரிக் கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதோடு மற்றும் 5 ஆண்டுகளில் பாடவிதானம் மாற்றமடையாமையினாலும் மற்றும் 8 ஆண்டுகள் பயன்படுத்தக்கூடியது என்பதாலும் மீண்டும் மீண்டும் அச்சிடவேண்டி ஏற்படாமை காரணமாக இதன் பயன்பாட்டுத் தன்மை உயர் மட்டத்தில் இருப்பதாக பி.க.அ கூறினார்.

பாடநூல் அச்சிடுவதற்கு வருடாந்தம் செலவாகும் நிதியினை குறைக்கும் நடவடிக்கையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பாடநூல்களின் முன்னோடி செயற்திட்டமாக செயற்கை கடதாசிகளில் அச்சிடுவதற்கு கல்வி அமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் யோசனை தெரிவிக்கப்பட்டது. அப்பாடநூலை எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் பல்வேறுபட்ட தலைப்புக்களின் கீழ் செலவாகும் நிதியினை மட்டுப்படுத்துவதற்கும் மாணவர்களின் புவியியல் விஞ்ஞானப் பாடத்தின் கற்றல் செயற்பாட்டின் பண்புசார் மட்டத்தை விருத்தி செய்வதனை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 16/1219/742/026 மூலம் 2016 ஆம் ஆண்டுக்காக அச்சிடப்படும் பாடநூல்களின் ஒரு பகுதி மேற்பார்வைச் செயற்திட்டமாக நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய செயற்கை கடதாசியில் அச்சிடுவதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் ஊடாக யோசனை தெரிவிக்கப்பட்டது.

7 ஆம் தரத்தின் புவியியல் விஞ்ஞான சிங்கள மொழி, தமிழ் மொழி, ஆங்கில மொழி என்ற அடிப்படையில் சாதாரண கடதாசியினை அச்சிடும் போது சமர்ப்பிக்கப்பட்ட குறைந்தபட்ச விலை மற்றும் செயற்கை கடதாசியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றது.

| புத்தகம் | சாதாரண கடதாசி 2016 ஜூன் மாதத்தில் இருந்த விலை | செயற்கை கடதாசி 2016 டிசம்பர் மாதத்தில் இருந்த விலை | வித்தியாசம் | விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| சிங்கள மொழி | 45.69 | 305.55 | 259.86 | 568.75% |
| தமிழ் மொழி | 69.52 | 317.00 | 247.48 | 355.98% |
| ஆங்கில மொழி | 43.54 | 290.00 | 246.46 | 566.05% |

இருப்பினும் சாதாரணக் கடதாசியின் மூலம் அப்புத்தகத்தை ஆண்டு தோறும் அச்சிடும் போது விலைமனுக்கள் அதிகரிப்பதற்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் காரணங்களாக அமைந்தன.

i. ஒப்பீட்டு ரீதியில் ரூபாவியின் பெறுமதி குறைவடைந்தமை, ஒரு மெ.தொன் கடதாசியின் இறக்குமதி விலை 200 டொலரை விட இடைக்கிடையே அதிகரித்தது.

ii. அச்சு மூலப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

உ-ம் : லெமினேட் வானிஸ் இடும் போது செலவாகும் ஆண்டுக்கு மேற்கொள்ளும் போது மூலப் பொருட்களின் விலைகளின் கணிப்பீடு அதிகரித்தல்.

iii. புத்தகங்களின் அளவிற்கு இணைவாக விலை அதிகரிப்பு

முன்னோடி செயற்திட்டத்தின் கீழ் செயற்கை கடதாசி

புத்தகங்களை தயாரிக்கும் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் காரணமாக உற்பத்திச் செலவினம் குறைவடைந்தது.

i. புவியியல், விஞ்ஞானம், சிங்களம், தமிழ், ஆங்கில மொழியின் கீழ் இம் மூன்று புத்தகங்கள் 2018,2019,2020 ஆகிய ஆண்டுகளுக்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2017 ஆம் ஆண்டில் முன்னோடி செயற்திட்டம் ஊடாக வழங்கப்பட்ட இப்பாடநூல்கள் பாடசாலை முறைமையில் பயன்படுத்தப்பட்டமையினால் ஆண்டு தோறும் இப்புத்தகங்களுக்கு புதிதாக உற்பத்திச் செலவினம் ஏற்படவில்லை.

ii. எவையேனும் புத்தகம் பொதுவாக உற்பத்தி செய்யும் போது மேற்கொள்ளும் அடிப்படை ஆலோசனைக் கூட்டம், செயலமர்வை நடாத்துதல், மொழி பெயர்ப்புக் கட்டணம், மறுசீரமைப்புக்களை உள்ளடக்கும் அமர்வு, அச்சிடப்படும் வேளையில் அச்சகத்தின் மேற்பார்வை, பணியாளர் சபை மற்றும் களஞ்சிய ஊழியர் சம்பளம், அச்சிடும் பணிகளுக்கான செலவினம் இச் செயற்கை கடதாசி உற்பத்தியைத் தொடர்ந்து ஏற்படவில்லை.

டொலரின் பெறுமதி அதிகரிப்பு, கடதாசி விலை அதிகரிப்பிற்கமைய அதிகரிக்கக் கூடும் என ஊகிக்கப்படுகின்றது. (கற்கை அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு)

| **மொழி** | **புத்தகம் சாதாரண கடதாசியில் அச்சிடுவதற்காக ஏற்படும் செலவினம்** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2016 விலை** | **2017 விலை** | **எதிர்வரும் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்பட்ட விலை** | | | |
| | | | 2018 | 2019 | 2020 | 2021 |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சிங்களம் | 49.69 | 120/- | 150.8 | 200/- | 250/- | 325/- |
| தமிழ் | 69.52 | 125/- | 160/- | 210/- | 260/- | 335/- |
| ஆங்கிலம் | 43.54 | 80/- | 100/- | 105/- | 115/- | 130/- |

இருப்பினும் செயற்கை கடதாசி பயன்பாட்டின் மூலம் புத்தகங்களை தயாரிக்கும் போது 5 வருடங்களுக்காக அச்சிடப்படுவது 2017 ஆம் ஆண்டில் செலவான விலைகள் மாத்திரமாகும். இதனால் செயற்கை கடதாசியில் ஒரு பாடநூலை அச்சிடுவதற்காக ஏற்படும் செலவினம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையே ஏற்படுகின்றது. மேலதிக கட்டணம் மற்றும் மேலதிக செலவினங்களும் ஏற்படுவதில்லை.

செயற்கை கடதாசியினை அச்சிடுவதற்கு அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய செலவினம் மேலதிக செலவினம் அல்லது நட்டமாக மேற்பார்வை செய்யப்பட்டிருப்பது ஒரு வருடத்திற்கு (2016) சாதாரண கடதாசியில புத்தகத்தை அச்சிடுவதற்கான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளமையினாலாகும். இருப்பினும் 2017 ஆம் ஆண்டில் பாடநூல் அச்சிடுவதற்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 49.69 தொடக்கம் ரூபா 120 வரை அதிகரித்துள்ளது மேலும் விநியோக செலவினம் ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. இச்சகல செலவினங்களையும் கருத்திற் கொள்ளும் போது செயற்கை கடதாசிக்கு செலவான நிதியின் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு செயற்பாடாக அமைவது எதிர்காலத்தில் கடதாசிகள் அற்ற சிறந்த தரம்மிக்க பாடசாலை பொருட்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்காக 11 ஆம் தரத்தின் விஞ்ஞானக் கற்கை உபகரணங்களை தயாரித்து மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக விநியோகிப்பது ஆகும்.

| | | |
|---|---|---|
| | | இதற்கு மேலதிகமாக 6 ஆம் தரத்திற்கு கணிதம், ஆங்கிலப் பாடங்களுக்காக e-learning கற்கை பொருட்களைத் தயாரித்து விநியோகிக்கும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.<br><br>7 ஆம் தரத்தின் புவியியல் 03 பாடநூல்களின் மேற்பார்வை செயற்திட்டம் காரணமாக எக்காரணம் கொண்டும் நிதி அதிகரிப்பதற்கு காரணங்கள் ஏற்படாத வகையில் அரசாங்கத்திற்கு பாதிப்புக்கள் அற்ற வகையில் உற்பத்திகளை மேற்கொண்டு மாணவர்களின் பண்புசார் தரம்மிக்க கல்விக்கு பங்களிப்பு செய்யும் வகையில் பாடசாலை முறைமையில் அப்பாடநூல்களை பரிசீலனை செய்து அமுல்படுத்துவதற்கு தற்போது செயற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. |
| 16 | **2006.01.01 ஆம் திகதியின் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த இரசாயண ஆய்வுகூட ஊழியர்கள் மற்றும் நூலக ஊழியர்கள் குறித்த பதவிகளின் III ஆம் தரத்தில் வைக்கப்பட்டு சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப நிலையில் வைக்கப்பட வேண்டுமாயினும், II ஆம் தரத்தில் வைக்கப்பட்டு 12 ஆம் சம்பள நிலை வழங்கப்பட்டிருந்த துடன், காவலாளி மற்றும் நோயாளர் நிலைய ஊழியர் பதவிகளுக்கும் ஆரம்ப சம்பள நிலைக்குப் பதிலாக 12 ஆவது சம்பள நிலை வழங்கப்படடுள்ளமை.**<br><br>தற்போது பணியாட்டொகுதிப் பகுப்பாய்வு மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளதுடன் இது பற்றிய பூரண அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் வழங்குமாறு குழு கட்டளையிட்டது. | கணக்காய்வாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கமைய ஆரம்ப திறனற்ற ஊழியர் பிரிவின் பதவிதாரர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடுவதற்காக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் தேசிய சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் NSCC/05/38/SA 1-iii மற்றும் 2018.12.20 ஆம் திகதிய கடிதத்திற்கமைய நூலக ஊழியர், இரசாயண ஆய்வுகூட ஊழியர், காவலாளி மற்றும் அம்புலன்ஸ் வண்டி ஊழியர் பதவி PL-1 சம்பள அளவில் 3 வது கட்டத்திற்கு சேர்த்துக் கொள்ள பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 உத்தரவுகளுக்கு அமையவில்லை என்பதினால் கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பளத்தை மீள அறவிடுவதை இடைநிறுத்துமாறு அறவிக்கப்பட்டுள்ளது.<br><br>இதற்கமைய அமைச்சின் இலக்கம் ED/05/67/12/பொது/11 மற்றும் 2018.12.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய பதவி வகிப்போரின் மேலதிக சம்பள அறவீட்டினை இடைநிறுத்துமாறும் அதற்குரிய தேசிய சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவின் செயலாளரின் பரிந்துரை அமுல்படுத்த வேண்டுமென்றும் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பீடாதிபதிகள், ஆசிரியர் கல்லூரி அதிபர்கள் மற்றும் ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்கள் அறவுறுத்தப்பட்டனர்.<br><br>மேலும் ஊழியர்களின் நியமனக் கடிதத்தில் II வது வாசகத்தை மறுசீரமைத்து அவர்களை சரியான சம்பள அளவில் தாபித்து நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு) |
| 17 | **மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளிலிருந்து வெளியேறு கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒரு மாணவருக்கு ஒதுக்கப் படுகின்றன மொத்த சதுர அடிகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர் ஆசிரியர் விகிதம்.**<br><br>இது பற்றிய ஆய்வை நடாத்தி அறிக்கையிடுமாறு குழு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிட்டதுடன், பாடசாலை களில் காணப்படுகின்ற வாகனங்கள் பற்றிய தரவுக் கட்டமைப்பை அமைச்சு மட்டத்தில் பேணிவருவதன் முக்கியத்துவத் தையும் வலியுறுத்தியது. | பாடசாலை புள்ளிவிபரவியல் தகவல்களை பயன்படுத்தி தேவையான புள்ளிவிபரங்களை கணிப்பீடு செய்ய முடியும் என்பதினால் 2018 புதிய புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடுகளை செய்வதற்காக தேவையான புள்ளிவிபர பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>மாணவர் ஒருவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சதுரஅடி அளவு மாணவர் எண்ணிக்கை மற்றும் பாடசாலையின் நிலைமைக்கமைய வகைப்படுத்தி புள்ளிவிபரங்கள் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன.<br><br>பாடசாலைக்குரிய வாகனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 18 | **ஆசிரியர் கல்வியியலாளர்களின் சேவை மற்றும் ஆசிரிய ஆலோசகர்களின் சேவைப் பிரமாணக் குறிப்பின் தற்போதைய நிலைமை**<br><br>ஆசிரிய ஆலோசகர்களின் சேவைப் பிரமாணக் குறிப்பு சம்பந்தமான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக | அரச சேவை ஆணைக்குழு மற்றும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வை மற்றும் பரிந்துரை கிடைக்கப் பெற்றுள்ளது. இவ் விடயங்களுடன் மீண்டும் தொழிற் சங்கங்கள் மற்றும் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) உடன் கலந்துரையாடப்பட்டதுடன் இதன் போது ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கமைய தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு அரச சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | சம்பளம், ஆளணி முகாமைத்துவ சபை மற்றும் அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு கூடிய விரைவில் சமர்ப்பிப்பதாகவும் ஆசிரியர் கல்வியியலாளர்களின் சேவை தொடர்பில் ஆசிரியர் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருப்பது அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று அமுல்படுத்துமாறு என்றும் பி.க.அ. தெரிவித்தார். | |

ඇමුණුම 01

## විනය ගොනුවල වර්තමාන තත්ත්වය (2019.02.28 දිනට)

| විස්තරය | | එකතුව | මුළු එකතුව |
|---|---|---|---|
| මූලික විමර්ශන/පරීක්ෂණ පැවැත්වෙන | | 135 | 135 |
| විධිමත් විනය පරීක්ෂණ පැවැත්වෙන | අධ්‍යාපන | 21 | |
| | ESC | 24 | 48 |
| | රාජ්‍ය පරිපාලන | 3 | |
| චෝදනා පත්‍ර නිකුත් කර ඇති(විධිමත් විනය පරීක්ෂන ආරම්භ වී නොමැති) | අධ්‍යාපන | 8 | |
| | ESC | 9 | 19 |
| | රාජ්‍ය පරිපාලන | 2 | |
| චෝදනා පත්‍ර කෙටුම්පත් වෙත යොමු කර ඇති | අධ්‍යා.සේ.කමිටුව | 5 | |
| | රාජ්‍ය පරිපාලන | 4 | 09 |
| විනය නියෝග නිකුත් කිරීම සම්බන්ධ කටයුතු සිදුවන | අධ්‍යාපන | 6 | |
| | ESC | 6 | 17 |
| | රාජ්‍ය පරිපාලන | 5 | |
| විනය නියෝගට එරෙහි අභියාචනා සම්බන්ධ කටයුතු සිදුවන | රා.පරි. | 12 | 12 |
| වෙනත් | නඩු පැවැත්වෙන | 45 | 45 |
| | විගණන/මු.රේ.පරීක්ෂණ සිදුවන | 25 | 25 |
| | මු. වි. නි. ක්‍රියාත්මක වෙමින් පවතින | 76 | 76 |
| | රා. සේ. කො. උපදෙස් පැතීම | 6 | 6 |
| | පොලිස්පති/අල්ලස් අපරාධ | 10 | 10 |
| පොදු ගොනු ( විදුහල්පති/කලාප වාර්තා කැඳවන) | | 3 | 3 |
| එකතුව | | 405 | 405 |

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/12/පොදු/11/පත්වීම්

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018.10.27

විදුහල්පති මගින්,

ඩබ්.සී.කුමාරි,

පුස්තකාල සේවක,

කෑ/කෑගලු බාලිකා ම.වි..

## පුස්තකාල සේවක තනතුරට පත්කිරීම

උක්ත කරුණට අදාළව ඔබ වෙත නිකුත් කර ඇති මගේ අංක **ED/5/67/12/3/8(3)14** හා **2007.07.01** දිනැති පත්වීම් ලිපිය හා බැඳේ.

02. ජාතික වැටුප් හා සේවක සංඛ්‍යා කොමිෂන් සභාවේ ලේකම්ගේ අංක NSCC/2/6/6/4/1/9 හා **2009.05.18** දිනැති ලිපිය හා ආයතන අධ්‍යක්ෂ ජනරාල්ගේ අංක EST-3/RECRU/06/89M2 හා **2011.08.17** දිනැති ලිපිය අනුව,උක්ත පත්වීම් ලිපියේ **11** වන ජේදය පහත පරිදි සංශෝධනය කර ඇති බව කාරුණිකව දන්වා සිටිමි.

"**2007.08.24** දිනැති රාජ්‍ය පරිපාලන චක්‍රලේඛ අංක **6/2006(IV)** අනුව මෙම තනතුරට හිමි වැටුප් පරිමාණය **11,730 -10X120 - 10X130 - 10X145 - 12X160 - 17,600/-**( පී එල් 1-2006 ඒ) වේ.ඔබ මෙම වැටුප් පරිමාණයේ ආරම්භක වැටුප් පියවර වන රු.**11,730/-**ක මාසික වැටුප මත පිහිටුවනු ලැබේ.මෙයට අමතරව රජයේ නිලධරයන් වෙත රජය විසින් කලින් කලට ගෙවනු ලබන වෙනත් දීමනාවන් ද ඔබට හිමිවේ."

03. එමෙන්ම උක්ත කරුණ සම්බන්ධයෙන් ඔබ වෙත නිකුත් කර ඇති මගේ අංක **ED/5/67/12/3/8(3)14** හා **2007.07.01** දිනැති පත්වීම් ලිපියේ සඳහන් අනෙකුත් කොන්දේසි නොවෙනස්ව පවතී.

බී.කුසලානි ද සිල්වා
ජ්‍යෙෂ්ඨ සහකාර ලේකම්(ආයතන)

අත්/කලේ සුනිල් හෙට්ටිආරච්චි
අධ්‍යාපන ලේකම්

පිටපත්-

1. විගණකාධිපති
2. විශ්‍රාම වැටුප් අධ්‍යක්ෂ ජනරාල්
3. ප්‍රධාන ගණකාධිකාරී
4. පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂ - සබරගමුව
5. කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ - කෑගල්ල (ඉහත 02 ජේදය පරිදි වැටුප සංශෝධනය කිරීම සඳහා)
6. විදුහල්පති/පීඨාධිපති - කෑ/කෑගලු බාලිකා ම.වි.
7. පෞද්ගලික ලිපි ගොනුව



ලේකම් / செயலாளர் +94112784811 +94112785162
ගරු අමාත්‍යතුමා +94112784832 +94112784825